# பனிமயம்

ஏப்ரல் 2024

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

வெள்ளி விழா
ஆண்டுச்
சிறப்பிதழ்

5





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா தந்த மகிழ்ச்சியில் வாழ்கிற நாம் இயேசு தந்த வெற்றிக்காக நன்றி கூறி, பாஸ்கா காலத்தின் வெற்றி வாழ்வு வாழ்வோமாக!

"பனிமயம்" வெள்ளி விழாக் கொண்டாட்டம் இம்மாதம் **07.04.2024** ஞாயிறு அன்று மாலை **04.00** மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெறும் நிறைவு விழாவோடு முடிவுக்கு வரவிருக்கிறது. கடந்த மூன்று மாதங்களில் நடைபெற்ற மூன்று சிறப்பு நிகழ்வுகளும் இனிமையாக இருந்தன.

ஒன்றிய அரசைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் இம்மாதம் நடைபெறவுள்ளது. மிகவும் நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம் என்பதை உணர்ந்து, நாம் அரசியல் விழிப்புணர்வோடு வாக்களிக்க வேண்டும். அத்துடன், நமது கையறு நிலையை உணர்ந்து ஆண்டவரிடமே நாம் சரணடைய வேண்டும். இஸ்ரயேல் மக்கள் எப்போதெல்லாம் அரசியல் நெருக்கடியைச் சந்தித்தார்களோ, அப்போதெல்லாம் கடவுளிடம்தான் அடைக்கலம் புகுந்தார்கள். ஆண்டவரும் அவருக்கு செவிசாய்த்தார் என்று விவிலியத்தின் பல பக்கங்களிலும் நாம் வாசிக்கிறோம்.

எடுத்துக்காட்டாக, யூதர்கள் மாபெரும் நெருக்கடியைச் சந்தித்தபோது, எஸ்தர் நோன்பிருந்து, சாம்பல் பூசி "அனைத்தின் மேலும் அதிகாரம் செலுத்தும் கடவுளே, நம்பிக்கை இழந்த எங்களது குரலுக்குச் செவிசாயும். தீயோரின் கைகளினின்று எங்களைக் காப்பாற்றும்; அச்சத்தினின்று எங்களை விடுவியும்" (எஸ்(கி) 4:17) என்று மன்றாடியதுபோலவே, நாமும் நோன்பிருந்து உருக்கமாக மன்றாடுவோமாக. அப்போது. தேர்தலில் யார் வென்றாலும், ஆண்டவரது பாதுகாப்பு நம்மோடு இருக்கும்.

தங்கத் தேரில் வெற்றிப் பவனி வந்த நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகத் தொடர்ந்து மன்றாடுவாராக!



என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

# உள்ளே...

## வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் 5


1. ஏழு சகோதரர்களின் தாய்! . . . . . . . . . . . . . . . . 4
அருள்பணி. குமார்ராஜா

2. அன்னையைப் போற்றும்போது தந்தையைப் போற்றுகிறோம்! . . . . . . . . . . . . . . . . . . . . 6
அருள்முனைவர் லெரின் டிரோஸ்

3. பனிமயம் - வெள்ளிவிழா! . . . . . . . . . . . . . . . . 8
கலாபன் வாஸ்

4. புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கில் மரபுகளும் மாற்றங்களும் . . . . . . . . . . . 10
அருள்பணி. குமார்ராஜா

5. மனிதநேய மாதா . . . . . . . . . . . . . . . . . . . . 12
பாத்திமா லசிங்டன்

6. பனிமய பங்குத் தந்தையர் . . . . . . . . . . . . . . 13

7. பனிமய சாட்சியங்கள் . . . . . . . . . . . . . . . . . 14

8. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . 16

9. மாதம் ஒரு மாதா படம் . . . . . . . . . . . . . . . . 19

10. பனிமயப் பகிர்வு. . . . . . . . . . . . . . . . . . . . . 20

11. தங்க காணிக்கைகள் விபரம் . . . . . . . . . . . . 22

12. பனிமயம் வெள்ளிவிழா ஆண்டுக் கொண்டாட்டம் . . . . . . . . . . . . . . . . . . . . 24



உதயம் 25 தாரகை 8

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
புனித பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா



### பனிமயம் விளம்பர விபரங்கள்

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
புனித பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com



### இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

#### பெண்களின் பங்கிற்காக...

பெண்களின் கண்ணியம், மகத்தான மதிப்பு ஆகியவை ஒவ்வொரு பண்பாட்டிலும் கண்டுகொள்ளப்படவும், உலகின் பல்வேறு பகுதிகளில் அவர்கள் அனுபவிக்கும் பாகுபாடு முற்றுப்பெறவும் நாம் மன்றாடுவோம்.

*மரியன்னையின் முன்னோடிகள் : 9*

# ஏழு சகோதரர்களின் தாய்!



"ஆண்டவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால் அனைத்தையும் துணிவோடு தாங்கிக்கொண்டார்" (2 மக் 20)

திருவிவிலியம் மூவாயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதை நாம் மறந்திடக் கூடாது, தூய ஆவியாரின் தூண்டுதலால் எழுதப்பட்டிருந்தாலும், மனித ஆசிரியர்களின் சிந்தனை, மனநிலை, இறையியல் நிலைப்பாடு போன்றவையும், அந்தக் கால சூழலின் பண்பாடும் விவிலிய எழுத்துகளில் தாக்கத்தை ஏற்படுத்தின என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எனவேதான் சில விவிலிய நூல்கள் புகழ்பெற்ற தலைவர்களின் பெயரால் எழுதப்பட்டன. எடுத்துக்காட்டாக, விவிலியத்தின் ஐநூல் என்று அழைக்கப் படும் தொடக்க நூல், விடுதலைப் பயணம், எண்ணிக்கை, லேவியர், இணைச் சட்டம் ஆகிய ஐந்து நூல்களையும் மோசே எழுதினார் என்று மரபு சொல்கிறது. இன்றைய விவிலிய ஆய்வுகள் அவற்றை மோசே எழுதியிருக்க முடியாது என்று எண்பித்தாலும், அன்றைய காலகட்டத்தின் மனநிலையை நமக்கு எடுத்துச் சொல்கின்றன.

விவிலிய மாந்தர் காலத்தில் மானிட உரிமைகளோ, பெண்ணுரிமையோ எண்ணிப்பார்க்க இயலாதவை. எனவேதான், விவிலியத்தில் பெயரில்லா பெண்கள் பலரைக் காண்கிறோம். புகழ்பெற்ற பெண்களாயிருந்தபோதும்கூட, அவர்களின் பெயர்கள் பதிவு செய்யப்படாதது அன்றைய பண்பாட்டுச் சூழலின் வெளிப்பாடு என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அவ்வாறு, பெயர் சொல்லப்படாத, புகழ்பெற்ற ஒரு பெண்மணிதான் மக்கபேயர் இரண்டாம் நூலில் நாம் சந்திக்கும் சகோதரர்கள் எழுவரின் தாய்.

அரசன் அந்தியோக்கு எப்பிபானின் காலத்தில் யூதர்கள் கிரேக்க பழக்க வழக்கங்களைப் பின்பற்றுமாறு கட்டாயப் படுத்தப்பட்டார்கள். குறிப்பாக, யூதர்களின் திருச்சட்ட மரபுக்கு எதிராகப் பன்றி இறைச்சியை உண்ணக் கட்டாயப்படுத்தப் பட்டார்கள். அதற்கு மறுப்பு தெரிவித்து மறைசாட்சியாய் இறந்தவர் 90 வயது முதியவரான எலயாசர். குறிப்பாக, தன் பொருட்டு இளைஞர்கள் நெறிபிறழக் கூடாது என்பதற்காகவே அவர் தன்னுயிரைக் கையளித்தார். இந்நிகழ்வு 2 மக்கபேயர் 6ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, "சகோதரர்கள் எழுவரின் சான்று" என்று தலைப்பிடப் பட்டிருக்கும் **ஏழாவது** அதிகாரத்தில் பன்றி இறைச்சி உண்ண மறுத்த காரணத்துக்காக ஒருவர் ஒருவராய்த் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட ஏழு இளைஞர்கள் பற்றியும், அவர்கள் அனைவரையும் ஊக்குவித்து;, தமது துயரைத் துணிவுடன் தாங்கிக்கொண்ட அவரது தாய் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

இந்தத் தாயைப் புகழ்ந்து பேசும் இந்நூல், "எல்லாருக்கும் மேலாக, அவர்களுடைய தாய் மிகவும் போற்றுதற்குரியவர், பெரும் புகழுக்குரியவர். ஒரே நாளில் தம் ஏழு மைந்தர்களும் கொல்லப்பட்டதை அவர்

கண்டபோதிலும், ஆண்டவர்மீது கொண்டிருந்த நம்பிக்கையால் அவை அனைத்தையும் மிகத் துணிவோடு தாங்கிக் கொண்டார்" (2மக் 7:20) என்று புகழாரம் சூட்டுகிறது.

ஏழு மகன்களும் ஒவ்வொருவராக வரவழைக்கப்பட்டு, பன்றி இறைச்சி உண்ணுமாறு வற்புறுத்தப்பட்டனர். அனைவரும் துணிவுடன் மறுத்தனர். எனவே, ஒருவர் பின் ஒருவராக எழுவரும் துன்புறுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர். ஆனால், ஏழு மகன்களுக்கும் இந்த வீரத்தாய் ஊக்கமொழிகள் உரைத்தார். குறிப்பாக, இளைய மகன் மீதாவது இந்தத் தாய் பரிவு காட்டுவாள் என்று எண்ணிய அந்தியோக்கு தாய் மகனுக்கு அறிவுரை கூறுமாறு வேண்டினான். "மன்னன் அவரை மிகவும் வேண்டிக்கொண்டதனால், அந்தத் தாய் தம் மகனை இணங்க வைக்க இசைந்தார்" (2 மக் 7:26) என்று ஒரு "ட்விஸ்ட்" திருப்பத்தைக் கொடுத்துவிட்டு, அந்தத் தாயின் வீர உரைகளைப் பதிவுசெய்கிறது இந்த அதிகாரம்.

"மகனே, என்மீது இரக்கம் கொள். குழந்தாய், உன்னை நான் வேண்டுவது: இக்கொலைஞனுக்கு அஞ்சாதே. ஆனால், நீ உன் சகோதரர்களுக்கு ஏற்றவன் என மெய்ப்பித்துக் காட்டு. இறைவனின் இரக்கத்தால் உன் சகோதரர்களோடு உன்னையும் நான் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி இப்போது சாவை ஏற்றுக்கொள்" (2 மக் 6:27-29) என்று சொல்லி ஊக்கமூட்டினார்.

எனவே, இளைய மகனும் தன் உயிரைக் கையளிக்க முன் வந்தான். எனவே, மன்னன் மற்ற அனைவரையும்விட அவரை மிகக் கொடுமையாய் வதைத்தான். "எனவே, அந்த இளைஞர் ஆண்டவரிடம் முழு நம்பிக்கை கொண்டவராய் மாசற்ற நிலையில் மாண்டார். இறுதியாக, தம் மக்களைத் தொடர்ந்து அந்தத் தாயும் இறந்தார்" (2 மக் 6:39-41).

இந்தத் தாயின் இயல்புகளை ஆய்வு செய்யும் விவிலிய அறிஞர்கள் இவரிடம் அன்னை மரியாவின் சாயல் விளங்குவதை எடுத்துக்காட்டுகிறார்கள். தன் ஏழு மகன்களும் ஒருவர் பின் ஒருவராக மறைசாட்சியாக இறக்கும்போது, உடன் நின்று ஊக்குவிக்கிறார் இந்த அன்னை. இவர் போலவே, அன்னை மரியாவும் தம் மகனின் பாடுகளின்போது சிலுவையடியில் நின்றுகொண்டிருந்தார் (யோவா 19:25).

ஏழு மகன்களை ஒவ்வொருவராக இழந்து ஏழு துயரங்களை ஏற்றுக்கொண்ட அந்தத் தாயைப் போலவே, அன்னை மரியாவும் ஏழு துயரங்களைத் தம் வாழ்வில் எதிர்கொண்டார் என்கிறது நமது திருமரபு. "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2:35) என்று இறைவாக்காக முன்னுரைத்தார் சிமியோன். அவ்வாறே, இயேசுவின் குழந்தைப் பருவத்திலிருந்து அவரது இறப்புவரை ஏழு வியாகுலங்களை மரியா எதிர்கொண்டார்.

இந்தத் தாயைப் பற்றி சொல்லப்பட்டுள்ள இன்னொரு கருத்தும் நம் கவனத்தை ஈர்க்கிறது. ஏழு மகன்களும் சாவின் விளிம்பில் நின்றுகொண்டிருந்தபோது, "அவர்கள் ஒவ்வொருவருக்கும் தாய்மொழியில் அறிவுரை கூறினார்; பெருந்தன்மை நிறைந்தவராய்ப் பெண்ணுக்குரிய பண்பையும் ஆணுக்குரிய துணிவையும் இணைத்து (2 மக் 7:21) அவர்களிடம் பேசினார்.

தமது துயர நேரங்களில் அன்னை மரியாவிடமும் பெண்ணுக்குரிய பண்பும், ஆணுக்குரிய துணிவும் இருந்தன என்று நாம் புரிந்துகொள்ளலாம். குழந்தை இயேசுவைக் காப்பாற்றுவதற்காக எகிப்து நாட்டிற்குத் தப்பியோடியபோது அவரிடம் மென்மையும், துணிவும் இணைந்தே இருந்தன என்பது உறுதி.

இவ்வாறு, ஏழு சகோதரர்களின் தாய் ஏழு வியாகுலங்களை அனுபவித்த அன்னை மரியாவின் முன்சாயலாக விளங்குகிறார்.



அருள்பணி. குமார்ராஜா

# அன்னையைப் போற்றும்போது தந்தையைப் போற்றுகிறோம்!



செபமாலை ஒரு மரியன்னை மன்றாட்டா? அல்லது கிறிஸ்தியல் மன்றாட்டா? என்பது நல்லதொரு கேள்வி. அது கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மரியன்னை மன்றாட்டு என்பதே பொருத்தமான விடை. காரணம், செபமாலை செபிக்கும்போது நாம் ஆண்டவர் இயேசுவின் வாழ்வில் நிகழ்ந்த மறையுண்மைகளைத் தியானிக்கின்றோம். அந்த மறையுண்மைகளை நம் வாழ்வாக்க மன்றாடுகிறோம்.

எனவேதான், செபமாலையை நாம் எந்த சூழலிலும் செபிக்கலாம். திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுல் நற்கருணையை எழுந்தேற்றம் செய்து, அதற்கு முன் முழந்தாள் படியிட்டு செபமாலை செபிக்கின்ற காட்சியை நாம் கண்டிருக்கிறோம்.

அது மட்டுமல்ல, "அருள் நிறைந்த மரியே வாழ்க" என்று நாம் அன்னையை வாழ்த்தும்போது, ஆண்டவர் இயேசுவையும், விண்ணகத் தந்தையையும் போற்றுகிறோம் என்பதையும் உணரும்போது நாம் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறோம்.

மரியன்னையை வாழ்த்துவதற்கான காரணத்தை அன்னை மரியா தமது வாயினாலேயே எடுத்துரைத்தார். "இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர்" என்று முன்னுரைத்த மரியா, அதற்கான காரணங்களையும் எடுத்துரைக்கிறார். "ஏனெனில், அவர்தம் அடிமையின் தாழ்நிலையை கண்ணோக்கினார்.... வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்" (லூக் 1:48-49). இறைவனின் **கடைக்கண் பார்வையும்** அவரது **வல்லமையும்தான்** காரணம் என விளக்கம் தருகிறார்.

அன்னை மரியா இந்த இறைவாக்கை சொன்ன சூழலைப் பார்க்கும்போது. அவரின் தாழ்ச்சி இன்னும் உயர்வடைகிறது. "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்" (லூக் 1:42) என்று எலிசபெத்து உரத்தக் குரலில் வாழ்த்தியபோது, இதனைக் கூறுகிறார். எலிசபெத்தின் வாழ்த்தை அவர் மறுக்கவில்லை. மாறாக அதற்கான காரணத்தை எடுத்தியம்புகிறார். இந்த ஆசீருக்கு காரணம் தான் அல்ல, கடவுளின் இரக்கமும் வல்லமையுமே என்று கடவுளை முன்னிலைப்படுத்துகிறார். தன்னை அடிமை என்று மீண்டும் குறிப்பிடுகிறார். வானதூதரிடம் சொன்னதை மறுபடியும் உறுதிப்படுத்துகிறார். எனவே, அன்னை மரியாவை "பேறுபெற்றவர்" என்று எல்லாத்

தலைமுறையினரும் வாழ்த்தும்போது, மரியாவை மட்டுமல்ல, அதற்கு காரணமான ஆண்டவரையும் வாழ்த்துகிறோம் என்பது அன்னையின் பாடலிலேயே அடங்கியிருக்கிறது. அன்னை மரியா இறைவனுக்கு இணையானவர் இல்லை. ஆனால் எப்பொழுதும் இறைவனோடு இணைந்திருந்தவர். அதனால்தான் அவரைப் போற்றுகிறோம்.

மேலும், அன்னை மரியா காலத்தை கடந்தவர். அவரது தோற்றம் குறித்து படைப்பின் தொடக்கத்திலேயே முன்னறிவிக்கப்பட்டாலும் (தொநூ 3:15), இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் இயேசுவின் பிறப்பில் செயலாக்கம் பெறுகிறது. அவர் ஒரு விதிவிலக்கு. இயற்கையின் நியதிகளும் விதிகளும் அவரைப் பொறுத்தவரையில் சற்று விலகி நிற்கின்றன. சாத்தானின் தலையை நசுக்க வேண்டிய வித்தை அவர் பெற்றெடுக்க வேண்டியிருந்ததால், சாத்தானால் இவ்வுலகில் நுழைந்த பிறப்புநிலை பாவத்திலிருந்து (ஜென்ம பாவம்) விலக்கு பெற்று, அமல உற்பவியாக திகழ்கிறார். கணவனை அறியாமல் தாய்மை அடைகிறார். தாயான பிறகும் கன்னியாக, கன்னித் தாயாக நிலைக்கிறார். அவர் காலத்தைக் கடந்தவராக இருப்பதால்தான் பல்வேறு இடங்களில் இன்றும் தொடர்ந்து காட்சிகள் தரமுடிகிறது.

மரியாவை நமது தாயாகக் கொண்டிருப்பது அவருக்கு அல்ல, நமக்குத்தான் பெருமை. அது விவிலியத்தை ஏற்றுக்கொள்ளும் அனைத்து நம்பிக்கையாளர்களின் கடமையும்கூட. அவரைப் பேறுபெற்றவர் என்று வாழ்த்தும்போது விவிலிய இறைவாக்கு (லூக் 1:48) நிறைவேற நாம் கருவிகளாக மாறுகிறோம். மரியாவின் இறைவாக்கு நம் மூலம் நிறைவேறுகிறது. முதலில் கபிரியேல் தூதர், பின்னர் எலிசபெத்து தொடங்கி இந்நாள் வரையிலும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அனைத்துத் தலைமுறையினரும் அவரைப் பேறுபெற்றவர் என்று போற்றி வருகின்றனர். அதன் மூலமாக இறைவனின் கருணையையும் வல்லமையையும் பறைசாற்றி வருகின்றனர்.

எனவே மரியாவை வாழ்த்தும்போது இரண்டாயிரம் ஆண்டு பழமையான நீண்ட பாரம்பரியத்தில் நம்மையும் இணைத்துக் கொள்கிறோம், வானவரோடும் மண்ணவரோடும் நாம் கைகோர்க்கிறோம். மூவொரு இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுகிறோம். ஏனெனில் கடவுள் அனுப்பிய தூதர்தான் “அருள் நிறைந்தவரே” என்று வாழ்த்துகிறார்; தூய ஆவியாரின் தூண்டுதலால்தான் “பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்” என்று எலிசபெத்து வாழ்த்துகிறார். “இவரே உம் தாய்” என்ற இயேசுவின் வார்த்தைக்குத்தான் அவரது அன்புச் சீடர் கீழ்ப்படிகிறார்.

எல்லாத் தலைமுறையினரும் பேறுபெற்றவர் எனப் போற்றும் அன்னை மரியாவைக் குறித்த செய்திகளை அனைவருக்கும் அறிவிப்பதற்காக தொடங்கப்பட்டு, இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து இன்றும் சிறப்பாக அன்னையின் புகழைப் பாடிக் கொண்டிருக்கும் “பனிமயம்” இதழ் விருட்சமடைய நமது வாழ்த்துக்கள். அதற்கான விதையை விதைத்து. உரமிட்டு, தண்ணீர் ஊற்றி, களையெடுத்து இன்று வளர்ந்த மரமாக கம்பீரமாக நிற்க உழைத்த அனைவருக்கும் நமது பாராட்டுக்கள். தலைமுறை போற்றும் பனிமயத்தாயின் பரிந்துரையின் வல்லமையால் “பனிமயம்” இதழும் தலைமுறை தாண்டி, தலைமுறை போற்றும் இதழாக நிலைத்து நிற்க நமது செபங்களும் வாழ்த்துக்களும்!



**அருள்முனைவர்**
**லெரீன் டிரோஸ்**

# 'பனிமயம்' – வெள்ளிவிழா!




1999வது ஆண்டு, ஆகஸ்டு திங்களில், பனிமயத் தாயின் மகிமைப் பெருவிழா நிறைவுற்ற சில நாள்களில், அப்போதைய திருத்தல அதிபர் பேரருட்திரு. பவுல் ராபின்ஸ்டன் அடிகளாரின் சிந்தனையில் உதித்ததுதான் – பனிமய அன்னையின் அருளைப் பரப்பும் மாத இதழ் – 'பனிமயம்'.

1999 – செப்டம்பர் மாதத்திலேயே 'பனிமயம்' முதல் இதழ் வெளிவந்தது.

ஒவ்வொரு பருவ ஏட்டிற்கும் ஓர் இலக்குத் தேவை. 'பனிமயம்' இதழின் இலக்கு....

✳ மாதாவின் மகிமைக்காக

✳ மானுடம் மலர

இந்த நோக்கத்துடன் வெளிவரும் 'பனிமயம்' திங்களிதழ், தூய பனிமய அன்னையின் புகழ் பரப்புவதோடு, மரியியல் சிந்தனைகளையும், இறையியல் கருத்துகளையும், குடும்ப நலன் பேணும் எண்ணங்களையும், சமூக மேம்பாட்டுக் கோட்பாடுகளையும் இதழ்தோறும் பரப்பி வருகிறது.

இதுவரை, வேறு எந்தக் கத்தோலிக்கத் தமிழ் இதழ்களிலும் வெளிவந்திராத அளவு, தேவ அன்னையின் பல்வேறு வண்ணப் படங்களையும், தேடிப் பிடித்து, ஒவ்வொரு மாதமும் அட்டையில் வெளியிட்டு, வாசகப் பெருமக்களைப் பரவசப் படுத்துகிறது. இந்த அட்டைப் படங்களின் அடிப்படையிலேயே பட்டப் படிப்புக்கான ஆய்வுக் கட்டுரைகளை எழுத முடியும்.

### அறிமுக எழுத்தாளர்கள்

இதழியல் துறையில் புதிய எழுத்தாளர்களை உருவாக்கவும், அறிமுகப் படுத்தவும் எடுத்துக்கொண்ட முயற்சியினால், ஏராளமான எழுத்தாளர்களை 'பனிமயம்' அறிமுகப்படுத்திக் கௌரவித்தது. அப்படி முதன் முதலில் அறிமுக எழுத்தாளராகச் சுட்டிக் காட்டப்பட்ட பெயர் திருமதி. ஜெரினா திபூர்சியுஸ்.

வரிசையாக – டயானா வியானி, மேரி ஜோஸ்பின், இந்திரா சீலன், G. ஜெயந்தி ஜார்ஜ், ஜெனோ ரமேஷ், P. ரூபி (கல்லூரி மாணவி).

25 ஆண்டுகள் வரலாற்றில் இதுவரை ஒரே ஒரு தொடர்கதைதான் வெளிவந்துள்ளது. அதை எழுதிய பெருமைக்குரியவர் டயானா வியானி. இவர், ஏராளமான சீசன் சிறுகதைகள் எழுதியுள்ளார்.

**'இயேசுவின் தேசத்தில்'** என்ற திருப்பயணத் தொடர் கட்டுரைகளை **T. மைக்கிள் ராஜ் டிமெல்** எழுதியளித்தார்.

'வேதாளை வேதசாட்சிகள்' – D.T. வாஸ் / 'ஒரு மாமனிதரின் இறுதிநாள்கள்' – கலாபன் வாஸ் / புனித பிரான்சிஸ் சவேரியார் – சித்திரத் தொடர் / விவிலியப் போட்டி / 'டார்ப்பிடோ'வின் (நெய்தல் அண்டோ) அரசியல்–சமூக விழிப்புணர்வுக் கட்டுரைகள் மட்டுமின்றி –

பிரபல எழுத்தாளர்கள் : செல்வராஜ் மிராந்தா, தம்பிஜயா பர்னாந்து, பொ.ம. ராசமணியின் எழுத்தோவியங்கள்

– J.M. அன்றோ ரூபன், ஜே.பி. பெர்னாண்டோ, ஞானியார் ஆலிவர் பெர்னாண்டோ, பெர்க்மான்ஸ் மோத்தா, ப. பெருமாள், டி.பி. மரிய ஜாண், வேதியர் S. ஜோசப், ஹெலன் ஞானப்பிரகாசம், பிலோ ஜான், T. கேத்தரின் மேரி, Dr. ரெக்ஸ் சில்வேயிரா, திருமதி. புஷ்பம் பனிமயம்,

M. அந்தோனி துசியன், M. சசி பெர்னாண்டோ.

கவிஞர் பெருமக்கள் – ‘கவித்தென்றல்’ L.F. மாறன், கலியாவூர் தாசன், செல்வராஜ் மிராந்தா, மகிபன் விக்டோரியா, லியோனா சில்வேரா.

பேரருட்தந்தை பவுல் ராபின்ஸ்டன், பேரருட்தந்தை M. இரத்தினராஜ், அருட்தந்தை ஜெரோசின் அ. கற்றார் நிர்வாகப் பொறுப்பேற்றிருந்தபோது, 1999 செப்டம்பர் முதல் 2009 ஜனவரி வரை (121 மாதங்கள்) பொறுப்பாசிரியராகச் செயல்பட்டவர் கலாபன் வாஸ்.

**புதிய தோற்றத்தில் பனிமயம்**

2009 பெப்ரவரி இதழிலிருந்து ‘பனிமயம்’ பெரிய அளவில் தோற்றப் பொலிவுடன் வெளிவரலாயிற்று.

ஆசிரியர் பொறுப்பில்.... அருட்பணி. ஜெரோசின் அ. கற்றார் இதழைச் சிறப்பித்தார்கள்.

அருட்பணி. வில்லியம் சந்தானம் பணிக்காலத்தில், முனைவர் திரு. அண்டோ ரூபன் ஆசிரியர் பொறுப்பேற்றுச் சிறப்புச் செய்தார். அருட்சகோதரர் சேவியரும் ஆசிரியர் பொறுப்பில் இருந்தார்.

அருட்பணி. லெரின் டிரோஸ் பணிக்காலத்தில், உதவிப் பங்குத் தந்தையர் ஆசிரியர் பொறுப்பேற்று இதழ்களை வெளியிட்டனர்.

அருட்பணி. குமார்ராஜா பணியேற்றபின், ஆசிரியர் என்ற முறையில் ‘பனிமயம்’ இதழில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். பனிமய அன்னை பேராலயப் பங்கு மக்களின் நலன் கருதி

- மாதம் ஒரு மாதா படம்
- பனிமயப் பகிர்வு
- பனிமயச் சுவடுகள்
- பங்கில் நிகழ்ந்தவை
- பங்கில் நடைபெறவிருப்பவை
- பனிமய சாட்சியம்

என்ற புதிய இணைப்புகளை அறிமுகப் படுத்தினார்.

**வெள்ளி விழா**

தமிழ்க் கத்தோலிக்க இதழியல் துறையில் ஒரு புது மலராக முகிழ்ந்த ‘பனிமயம்’ மாத இதழ், இருபத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து பயணித்து, வெள்ளி விழாவைக் கொண்டாடும் நிலையை எட்டியுள்ளது மிகவே மகிழ்ச்சிக்குரியது.

வெள்ளி விழாவைக் கொண்டாடும் காலத்தில் 25 எழுத்தாளர்கள் பாராட்டும் விருதும் பெற்றனர்.

விவிலியப் போட்டிகளில் பரிசு பெற்றவர்கள் 85 பேருக்கும் பாராட்டும் பரிசும் வழங்கப்பட்டன.

‘பனிமயம் வெள்ளி விழா’வைச் சிறப்பிக்கும் வகையில் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டிகள் அறிவிக்கப்பட்டு, முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.


பனிமயம் வெள்ளி விழாச் சிறப்பு மலரும் வெளிவர இருக்கிறது..

எதைச் செய்தாலும் முறையாகத் திட்டமிட்டு மிக நேர்த்தியுடன் செயல்படுத்தும் ஆற்றல்மிக்க அருட்பணி. குமார்ராஜா, ‘பனிமயம்’ வெள்ளிவிழாவைச் சீரும் சிறப்புமாக நடத்திய பெருமைக்கு உரியவர்.

பனிமய அன்னையின் பராமரிப்பில் ‘பனிமயம்’ மாத இதழ், பொன்விழாவை நோக்கிப் பயணிக்கிறது.

25 ஆண்டுகளாக ‘பனிமயம்’ இதழை வளர்த்தெடுத்த அருட்பணியாளர்கள், ஆசிரியர்கள், அருட்துறவிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், புரவலர்கள், சந்தாதாரர்கள், வாசகர்கள் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

தூய பனிமய அன்னையே, போற்றி, போற்றி, போற்றி!



**கலாபன் வாஸ்**

## புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கில்




# மரபுகளும் மாற்றங்களும் 1

மரபு என்பது ஒரு குடும்பம், நிறுவனம், நாட்டின் வாழ்வோடும், வரலாற்றோடும் இணைந்தது. அங்குள்ள மக்களின் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் அனைத்துமே ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குப் பின்னர் மரபாக மாறி விடுகின்றன. “பாரம்பரியம்” (tradition) என்னும் சமஸ்கிருதச் சொல்லையே, அழகு தமிழில் மரபு என்கிறோம். எல்லாப் பங்குகளிலும், கத்தோலிக்க நிறுவனங்களிலும் மரபுகள் இருக்கின்றன. குறிப்பாக, வரலாறு கூடக்கூட, அவற்றின் மரபுகளும் கூடுகின்றன. எனவேதான், ஈராயிரத்து இருபத்தைந்து ஆண்டுகளைத் தொட்டு நிற்கும் கத்தோலிக்கத் திருஅவைக்கென நெடிய மரபு உள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பார்வையில், “மரபும் விவிலியமும் நெருக்கமாகப் பிணைந்துள்ளன. ஒரே ஊற்றிலிருந்து பிறக்கின்றன. திருமரபு விவிலியத்தோடு இணைந்து இறைவார்த்தையின் ஒரே களஞ்சியமாக அமைகிறது” என்று ‘இறைவெளிப்பாடு’ என்னும் சங்க ஏடு சொல்கிறது.

மேலும், திரு அவையில் திருவழிபாட்டு மரபு, இசை மரபு, திருத்தூது மரபு, அருளடையாளங்கள் பற்றிய மரபு, துறவற சபைகளின் மரபு போன்ற பல்வகை மரபுகள் இருக்கின்றன என்பதை இரண்டாம் வத்திக்கான் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. இத்தகைய மரபுச் செல்வங்களை நாம் காக்க வேண்டும் என்று “இன்றைய உலகில் திருச்சபை” (எண் 56, 60) என்னும் கோட்பாட்டு ஏடு சொல்கிறது. அதே வேளையில், சில மரபுகள் முன்மதியோடு தழுவியமைக்கப்படவேண்டும் என்றும் அதே ஏடு (எண் 62) பரிந்துரைக்கிறது.

இந்தக் கண்ணோட்டத்தில் புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் நெடிய வரலாற்றை உற்று நோக்குகையில் பல மரபுகள் தோன்றி வளர்ந்துள்ளதையும், சில மறைந்துள்ளதையும், சில மாற்றம் பெற்றுள்ளதையும் நாம் காணலாம். காலம் மாற மாற மரபுகளும் முன்மதியோடு மாற்றம் பெறவேண்டும் என்னும் வத்திக்கான் சங்கத்தின் பார்வையிலேயே, இந்தப் பங்கிலும் மரபுகளும் மாற்றம் பெற்றுள்ளன என்பது பாராட்டுக்குரிய ஒன்று. இத்தகைய மரபுகளையும், அவற்றின் மாற்றங்களையும் ஏற்று, கடைப்பிடிக்கின்ற அனைவரும் போற்றுதற்குரியவர்கள் என்பதுவும் பதிவு செய்யப்படவேண்டிய ஒன்று.

பேராலயப் பங்கின் திருவழிபாடு, இசை, அருளடையாளங்கள், திருவிழாக்கள் ஆகியவற்றில் பாராட்டுக்குரிய, பிறரும் பார்த்துப் பின்பற்றக்கூடிய நல்ல மரபுகள் பல இருக்கின்றன. வழிபாட்டின் முதன்மையான நேரங்களில் “தேதேயும்” நன்றிப் பாடல் பாடுவது, “லவுதாதே” என்னும் போர்த்துக்கீசிய பாடலை இசைப்பது, பனிமய அன்னையின் பெருவிழா நாள்களில் “தேர்ஸ்” என்னும் செபமாலை, மன்றாட்டு மாலை, இறைவார்த்தைப் பகிர்வு, அருளிக்க ஆசி



அடங்கிய "மூன்றாம் மணி வழிபாடு" ஆகியன குறிப்பிட்டுச் சொல்லும்படியான மரபுகள். திருவருகைக்காலம், தவக்காலம் என்னும் இரண்டு திருவழிபாட்டுக் காலங்களிலும் திருமுழுக்கு, திருவிருந்து, திருமணம் ஆகிய மூன்று அருளடையாளங்களும் வழங்கப்படுவதில்லை என்பது இன்னொரு பாராட்டுக்குரிய மரபாகும். இது தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய மாதிரி மரபு. தவக்கால வெள்ளிக்கிழமைகளில் அதிகாலை சிலுவைப்பாதை, பெரிய வியாழன் நள்ளிரவில் சிலுவைப் பாதைப் பவனி, பெரிய வெள்ளியன்று நண்பகல் சிலுவைப்பாதை ஆகியன பனிமய அன்னைப் பேராலயப் பங்கிற்கேயுரிய தனி மரபுகளாகும். இவையும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டியவை என்பதில் ஐயமேயில்லை.

அதே வேளையி;ல், ஒரு சில மரபுகளைக் காலத்தின் தேவையறிந்து உடைக்கவும், மாற்றவும், தழுவியமைக்கவும், புதிய மரபுகளை உருவாக்கவும் இப்பங்கின் தலைமைப் பொறுப்பேற்ற பங்குத் தந்தையர்களும், அவர்களின் பரிந்துரையை ஏற்று பங்கு மக்களும் முன் வந்துள்ளனர் என்பது பிற பங்குகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. அத்தகையவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

புனித பனிமய அன்னைப் பேராலயப் பங்கின் வரலாற்றை இரண்டு கால கட்டமாகப் பிரிக்கலாம். இயேசு சபைத் துறவியான அருள்தந்தை விஜிலியுஸ் மான்சியின் காலத்திலிருந்து, தூத்துக்குடி மறைமாவட்டத்தோடு இப்பங்கு இணைக்கப்பட்ட காலம் வரை முதல் கட்டமாகக் கருதப்படலாம். தூத்துக்குடி மறைமாவட்டம் 1923 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பின்னர், 1930ஆம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டத்தோடு இணைக்கப்பட்ட கடந்த 94 ஆண்டு காலத்தை இரண்டாம் கட்டமாகவும் கொள்ளலாம்.

முதல் கால கட்டத்தின் தொன்மை, ஆவணங்களின்மை போன்றவற்றின் காரணமாக அதனைத் தவிர்த்துவிட்டு, கடந்த 94 ஆண்டு வாழ்வை மட்டுமே உற்று நோக்குகையில் மரபுகளும், மாற்றங்களும் ஏராளம் நிகழ்ந்துள்ளதை நாம் காணலாம். இந்தப் பங்கின் பெருமைமிகு பங்குத் தந்தையான இறையடியார் **அந்தோனி சூசைநாதர்** அடிகளாரே (1932-1938) மரபுகளுக்கும், மாற்றங்களுக்கும் வித்திட்ட ஞானமும், படைப்பாற்றலும் மிக்க முதல் அருள்பணியாளர் என்பதற்கு நம்மிடையே பல ஆதாரங்கள் உள்ளன.

மறையறிவும், இறைப்பற்றும் குறைந்த இளையோரை இனம் கண்டு அவர்களின் ஆன்மீக, சமூக வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அன்னார் தொடங்கிய பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபை இன்றளவும் இப்பங்கில் உயிர்த்துடிப்போடு செயல்பட்டு, இறையடியாரின் புகழுக்கு சான்று பகர்கிறது. தங்களது நிறுவனரின் மனவோட்டத்திற்கேற்ப இந்த சபையினரே கடந்த 90 ஆண்டுகளில் சில மரபுகளைக் காத்தும், சில மரபுகளைப் புதுப்பித்தும் வந்துள்ளனர். அவர்களும் பாராட்டுக்கு உரியவர்களே. - தொடரும்



அருள்பணி. குமார்ராஜா

# மனிதநேய மாதா

அம்மா.......

வங்கக் கடலோரம் கோவில் கொண்டு நித்தம் காத்திடும் உன்
தங்கத் திருமுகம் தினம் கண்டால் அல்லல் யாவும் அகலுதம்மா!
அம்மா! உன் கண்களில் மின்னிடும் கருணைக் கடலில்
கவலை யாவும் கணப் பொழுதில் கரைந் தோடுதம்மா!
மந்திரமாநகர் நாயகியே! உன் சுந்தரத் திருவதனம் காண
தாயைத் தேடி தாவி வரும் சேய் போல உன் திருத்தலம்
நாடி வந்தோமம்மா! உன் கருணை நிறை திருவிழியால்
எம்மை கண்கொண்டு பாருமம்மா!
முதிர்வயதில் கருவுற்ற எலிசபெத்தை காண நீ
கல்லும் முள்ளும் மெத்தை என காத தூரம் பல நடந்து
தாயையும் கருவிலுள்ள சேயையும் மகிழ்வுறச் செய்த
உன் மாண்பு மலையினும் பெரிதம்மா!
கனி தந்த திராட்சை ரசம் தீர்ந்தது என கலங்கி நின்ற
கானாவூர் மணவீட்டாரின் மனத்துயர் நீக்க நீர் மனுமகனை வேண்ட
நாயகனை கண்ட நன்னீரும் நாணி சிவந்து ரசமானதம்மா!
இறை அருளே! அழகே! அமுதே! அம்மா நீ நீடூழி வாழியவே!



பாத்திமா லசிங்டன்



பனிமய பங்குத் தந்தையர் 4

# அருள்முனைவர் லெரின் டிரோஸ்



கடந்த 25 ஆண்டுகளில் பனிமயம் இதழை வளர்த்தெடுத்த பெருமைமிகு பங்குத் தந்தையரின் வரிசையில் நான்காவதாக உயர்ந்து நிற்பவர்கள் அருள்முனைவர் லெரின் டிரோஸ் அவர்கள். அன்னார் 2014ஆம் ஆண்டில் பங்குத் தந்தையாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.

அருள்பணி. லெரின் படைப்பாற்றல் மிக்கவர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. "அன்னை மரியாவுக்கு மரியாதை", "குழந்தைத் திருமுழுக்கு" என்னும் இரண்டு நூல்களை ஆக்கியவர்கள். "வையக ராணி", "விண்ணொளிர் தாரகை", "புனித மாது" உள்ளிட்ட பல இசைப்பேழைகளைப் படைத்தளித்தவர்கள்.

அந்தப் படைப்பாற்றல் பனிமயம் இதழிலும் காணக்கிடைக்கிறது. தனது முதல் இதழான 2014 ஜீலை இதழில் "அடியவளுக்குத் தலை வணங்குவோம்" என்னும் தலைப்பில் அன்னாரது "திருத்தலத் தந்தை பேசுகிறார்" பகுதி தொடங்கியது. தொடர்ந்த மாதங்களில் "வியாகுல அன்னைக்குத் தலைவணங்குவோம்", "செபமாலை அன்னைக்குத் தலைவணங்குவோம்" என்ற தலைப்புகளில் எழுதி வியக்க வைக்கிறார்கள்.

அவர்களின் காலத்தில் உதவிப் பங்குத் தந்தையரோடு, அருள்சகோதரி ஆலோசனை, திருவாளர்கள் சேவியர் மெத்தோடியஸ், பிரபாவதி, ஜூடிக்ஸ், ஜாக்சன் ஆகியோர் ஆசிரியர் குழுவிலிருந்து பங்களிப்பு செய்துள்ளனர். தற்போதைய ஆசிரியர் அருள்பணி. குமார்ராஜா இவர்களின் ஐந்து ஆண்டு காலம் முழுவதும் "மரியன்னைத் திருத்தலங்கள்", "மரியன்னைப் புனிதர்கள்" என்னும் இரண்டு தொடர்களை எழுதியுள்ளது வியப்பைத் தருகிறது.

மேலும், எண்ணற்ற புதிய எழுத்தாளர்கள் பலருக்கும் பனிமய இதழில் எழுத வாய்ப்புத் தந்து அவர்களை ஊக்குவித்துள்ளார்கள். குறிப்பாக, ரோஸ் சேவியர், பிரேம் பிரைட்வின், மேரி வெர்ஜின், பனிமய சுகந்தி போன்ற பல பெண் எழுத்தாளர்கள் தங்கள் எழுத்தோவியங்களை வரைந்து நம்மை வியக்க வைக்கிறார்கள்.

லசால் சபைத் துறவியான அருள்சகோ. சேவியர் அவர்களை பனிமய இதழின் ஆசிரியராக்கி அழகு பார்த்துள்ளார் நம் தந்தை. சகோ. சேவியர் மாதந்தோறும் ஆசிரியர் பேனா எழுதியுள்ளார்கள். திருவாளர்கள் அற்புதசாமி, பவுல்ராஜ், வெனான்சியுஸ் போன்றோர் தொடர்ந்து எழுதியுள்ளனர். சில இதழ்களில் நகைச்சுவைத் துணுக்குகள் நம்மைச் சிரிக்க வைக்கின்றன.

இத்தனை பணிகளைச் செய்து, இதழை வளர்த்த தந்தை லெரின் டிரோஸ் அவர்களை பனிமயத்தின் வெள்ளி விழா ஆண்டில் நன்றியோடு நினைவுகூர்கிறோம். தற்பொழுது மணப்பாடு புனித யாகப்பர் கோவில் பங்குத் தந்தையாக இறைப்பணியாற்றும் தந்தை அவர்களுக்குப் பனிமய அன்னையின் ஆசிகளை வழங்குகிறோம்.

**அருள்பணி. குமார்ராஜா**



# பனிமய சாட்சியங்கள்

**பனிமய சாட்சியம் : 87**

## அபிஷேக் ஜெபஸ், தூத்துக்குடி இஞ்ஞாசியார்புரம் பங்கு

எனக்கு 8 மாதமாக வேலை இல்லாமல் மிகவும் சிரமப்பட்டேன். கடந்த நவம்பர் மாதம் நமது பேராலயத்தில் நடைபெற்ற “வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போருக்கான” பனிமய நோன்பு வழிபாட்டில் கலந்து கொண்டேன். காலையிலும், மதியமும் சாப்பிடாமல் முழுவதும் பிரார்த்தனையில் நானும் அம்மாவும் கலந்து கொண்டோம். அதன்பின் 20 நேர்காணல்களில் கலந்துகொண்டேன். இறுதியாக சென்னையில் எக்ஸ்லிக்டிக்ஸ் கம்பெனியில் ஆட்டோமேஷன் டெஸ்ட் இன்ஜினியராக வேலை கிடைத்திருக்கிறது. ஜனவரி மாதம் 12ஆம் தேதி சேர்ந்தேன். அதனால் மாதாவுக்கு நன்றி சொல்கிறேன். பனிமய அன்னையே நீர் வாழ்க! இயேசுவுக்கே புகழ்!

**பனிமய சாட்சியம் : 88**

## விஜயன்

### புனித பனிமய அன்னை திருத்தல பேராலயம், சூசையப்பர் அன்பியம்

நான் இரு சக்கர வாகன ஒர்க்ஷாப் ஆரம்பித்து 22 ஆண்டுகள் ஆகின்றன. இந்த ஆண்டு ஜனவரி 01ஆம் தேதி புத்தாண்டு அன்று காலையில் பனிமய மாதாவுக்கு மாலை போட்டு வேண்டிவிட்டு வேலைக்குப் புறப்பட்டேன். வெள்ளத்தின் காரணமாக நிறைய வண்டிகள் பழுது பார்ப்பதற்காக இருந்தன. அவற்றில் ஒன்றில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். வழக்கமான வேலைதான். ஆனால், திடீரென்று வெடித்து, தீப்பற்றி விட்டது. நல்வாய்ப்பாக, கையில் தீக்காயம் ஒன்றும் படவில்லை. பனிமய அன்னையிடம் வேண்டிக்கொண்டு சென்றதால், ஆண்டின் முதல் நாளிலேயே தாய் என்னைப் பாதுகாத்துவிட்டார்கள். இது போன்ற விபத்துகளில் பனிமயத் தாய் இதுவரையில் மூன்று முறை என்னை அற்புதமாகக் காப்பாற்றியிருக்கிறார்கள். அதனால் மாதாவுக்கு நன்றி சொல்கிறேன். பனிமய அன்னையே நீர் வாழ்க!

**பனிமய சாட்சியம் : 89**

## ஆன்சி மொறால், தமிழ் பேராசிரியை, குளச்சல்

என் தங்கையும் கணவரும் திருமணம் முடிந்து நான்கு வருடங்களாக பிரிந்திருந்தார்கள். அவர்கள் ஒன்றுசேர்வதற்காக நான் பனிமய மாதா கோவில் வந்து மாதாவிடம் அழுது வேண்டினேன். 2024 ஜனவரி மாதம் 24ஆம் தேதி இரண்டு பேரும் மனப்புரிதலோடு சேர்ந்தார்கள். அதற்கு மாதாவிற்கு நன்றி செலுத்துகிறோம். மேலும், எனக்கு சொந்தமாக ஒரு வீட்டை வாங்குவதற்கு பலமுறை முயற்சி செய்தேன். நான் ஜனவரி மாதம் 24ஆம் தேதி அந்த வீட்டை வாங்கினேன். மாதாவிற்கு நன்றி செலுத்துகிறேன். பனிமய அன்னையே நீர் வாழ்க!

**பனிமய சாட்சியம் : 90**

## முனைவர் அருண்மொழி செல்வி,
**வாகைக்குளம்**

நான் ஒரு தனியார் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி வருகிறேன். என் அப்பாவுக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தது. ஹெர்னியா அறுவை சிகிச்சை செய்தார்கள். ஆனால், அறுவை சிகிச்சை வெற்றியாகாமல் பாதியிலேயே நிறுத்திவிட்டு வெளியிலே வருகிற மாதிரி இருந்தது. அப்பா நான்கு மணி நேரம் மிகவும் சிரமப்பட்டார்கள். சிகிச்சை வெற்றிபெறாது என்று மருத்துவர்கள் சொல்லிவிட்டனர். அப்போது நான் அப்பாவின் உடல் நலனுக்காகப் பனிமய மாதாவிடம் வேண்டினேன். வியப்புக்குரிய விதத்தில் பதினைந்து நாட்களில் அப்பா நலம் பெற்றார்கள். இப்பொழுது நன்றாக இருக்கிறார்கள். எல்லா வேலையும் எப்பொழுதும் போல செய்கிறார்கள். அப்பாவிற்கு வயது 75. இந்த நிலைமையிலும் நன்றாக இருக்கிறார்கள் என்றால் அதற்கு மாதா மட்டும்தான் காரணம். அதனால் ஒரு தங்க சங்கிலியை மாதாவுக்கு காணிக்கை கொடுத்து நன்றி சொல்கிறேன். பனிமய அன்னையே நீர் வாழ்க!



**பனிமய சாட்சியம் : 91**

## ஆரோக்கிய டேவிட், மதுரை

நான் மதுரை, புதூர் அந்தோணியார் கோவில் பங்கைச் சார்ந்தவன். கடந்த வருடம் எனது மனைவி காலமாகிவிட்டார். எனக்கு ஒரு மகளும், மகனும் உள்ளனர். எனது மகள் ஜெனித், எம்.பி.ஏ படித்து முடித்தவுடன் அவளின் வேலைக்காக பனிமயத்தாயிடம் வந்து வேண்டிக் கொண்டேன். கல்லூரியில் நடைபெற்ற வளாக நேர்காணலில் நிறைய பேர் கலந்துகொண்டாலும் எனது மகளுக்கு நல்லதொரு நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அவளது முதல் மாத வருமானமாக ரூ. 15,000 கொடுக்கப்பட்டது. பனிமயத்தாயின் தங்கத்தேர் பவனியில் கலந்துகொண்டு மகளின் முதல் மாத வருமானத்தைக் காணிக்கைப் பெட்டியில் செலுத்தினேன். ஏழு மாதத்தில் நிரந்தர வேலையாக மாற்றப்பட்டு மகளுக்கு மாத வருமானம் ரூ. 30,000ஆக உயர்த்தப்பட்டது. அதையும் பனிமயத்தாயின் பாதத்தில் காணிக்கையாக செலுத்தினேன். நம்பி வந்தோர்க்கு அடைக்கலம் தரும் பனிமய அன்னையே நீர் வாழ்க!

# விவிலியப் போட்டி 110

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**1 மக்கபேயர் 1-3**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**ஓரிரு வரிகளில் விடையளி :**

1. போரில் வெற்றி என்பது விண்ணக இறைவனிடமிருந்து வரும் வலிமையைச் சார்ந்தது என்று கூறியவர் யார்?
2. மக்கபே என்னும் சொல்லுக்கு என்ன பெயர்?
3. மத்தத்தியா யாருடைய மகன்?
4. விண்ணக இறைவனின் திருவுளம் எதுவோ அதுவே நிறைவேறட்டும் என்று கூறியவர் யார்?
5. எங்கள் வழிபாட்டு முறைகளினின்று சிறிதும் பிறழமாட்டோம் என்றவர் யார்?
6. அறிவுக் கூர்மை படைத்தவன் யார்?
7. விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டவர் யார்?
8. முதலில் கிரேக்க நாட்டை ஆண்டு வந்தவர் யார்?
9. இஸ்ரயேலின் நீதித் தலைவன் யார்?
10. இஸ்ரயேலருள் வலிமையும் துணிவும் கொண்ட குழுவினர் யார்?

***விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.04.2024***

## விவிலியப் போட்டி 109

**மார்ச் 2024** — விடைக்குறிப்புகள்

***லூக்கா 22 - 23***

| | | |
|---|---|---|
| 1. | யோசேப்பு - பிலாத்திடம் | லூக் 23:52 |
| 2. | இயேசு - பெண்களைப் பார்த்து | லூக் 23:28 |
| 3. | இயேசு - பேதுருவிடமும் யோவானிடமும் | லூக் 22:8 |
| 4. | இயேசு - பேதுருவிடம் | லூக் 22:32 |
| 5. | பிலாத்து - தலைமைக்குரு, ஆட்சியாளர், மக்கள் | லூக் 23:13 |
| 6. | மக்கள் - பிலாத்திடம் | லூக் 23:1 |
| 7. | பணிப்பெண் - மக்களிடம் | லூக் 22:56 |
| 8. | இயேசு - சீடர்களிடம் | லூக் 22:40 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :



**94893 19976** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 203**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**

**சரியான விடை எழுதியவர்கள் : 133**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. குழந்தை இயேசு அன்பியம் — மோனிகா செபாஸ்டின்
2. மணல் மாதா அன்பியம் — கெயிற்றன் ஃபெர்னான்டோ
3. லூர்துமாதா அன்பியம் — ஜெனோ சேவியர்
4. மிக்கேல் அதிதூதர் அன்பியம் — வினோ அந்தோனி

**பாராட்டுக்குரியவர்கள் : 129**

**அந்தோனியார் அன்பியம்**
5. ரீனா மொறாயிஸ்
6. பிருந்தா சார்லஸ்
7. லூக்காஸ் சகாயம்
8. சரோஜா
9. ஜெயா
10. டோனி ரீகன் ஆஷா

**அன்னை தெரசா**
11. சுரேஷ் பிரேமா
12. ரெயிசா சுஜய்
13. சுகன் மோனிஷா
14. ரொவீனா
15. ஜூலியட் ரூபி
16. சாந்தி சந்தியா
17. பெற்றி சூசையா

**அன்னை வேளாங்கன்னி**
18. நான்சி
19. டென்சி
20. ஜொசிட்டா
21. ஆல்வின் மோத்தா

**கிறிஸ்தரசர்**
22. ரெக்ஸ் கிரீன்வெல்
23. ஜெகன் பெமினா
24. லூரட் வசந்த்
25. ஜூலியட் சாவியோ
26. செலஸ்கி கிளமெண்ட்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
27. இருதயம்மாள்

**திவ்யபாலன் அன்பியம்**
28. பிரின்சி
29. சகாயராணி தன்ராஜ்

**பாத்திமா மாதா**
30. ஜெசிந்தா கான்ஸ்டன்
31. ராஜா ரீனா
32. ஆல்வின் அனு
33. ஜெனிட்டா மைக்கேல்
34. ஆன்ட்ரியா டாரல்
35. ஸ்டெபி ரீகன்

**இரக்கத்தின் மாதா**
36. பாப்டிஸ்டா
37. பிரைட்டன் ஜெரோஃபின்
38. இருதயம்மாள் கொன்சால்
39. சித்ரா மோத்தா
40. சேவியரம்மாள் கோமஸ்
41. மேரி ஜியானா

**ஜெபமாலை மாதா**
42. கல்யாணி செல்வராஜ்
43. சகாயம்மாள் பெனடிக்ட்

**ஜூடு அன்பியம்**
44. அந்தோனிசாமி
45. ட்ரைபேனா
46. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
47. வெனிட்டாள்
48. எலிஜா இம்மானுவேல்
49. சார்லட் பிராங்க்
50. ஜெயா அகஸ்டின்
51. ஜெசிமா கிளாரன்ஸ்
52. சாந்தி ஆல்ட்ரின்
53. ஜோ ட்ரினிஷா
54. ரஸ்கின் வசந்தா
55. ஜூலியஸ் தல்மேதா
56. ராகேஷ்
57. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
58. கிறிஸ்டி லிஸ்டன்
59. பெனி மொறாயிஸ்
60. பெர்லி பென்சன்
61. நிர்மலா

**குழந்தை இயேசு**
62. மோனிகா செபாஸ்டின்
63. அந்தோனியப்பா பிச்சம்மாள்
64. எமல்டா
65. பிரான்சிஸ் வாஸ்
66. ஆரோக்கியராஜ் ஹெலினா
67. பெனாட் கார்லூஸ்

**மணல் மாதா**
68. ரொசாரி கோமஸ்

**லூர்து மாதா**
69. அகஸ்டா
70. ரோஸ்லின் தாமஸ்
71. சாண்டினா
72. ஆலிவர் வி. ராயன்
73. சகாயராணி
74. ஃபிலோ கோமஸ்
75. ரஜூலா ஜான்போஸ்கோ
76. ரம்யா

**மிக்கேல் அதிதூதர்**
77. ஜோசபின் பர்னாந்து
78. ஷீபா

**பனிமய அன்பியம்**
79. மெர்சி கோமஸ்
80. ஜூடு ரதி
81. ஜாக்குலின் வினோதினி
82. சுரேஷ் ஆனி
83. சகாயராஜ் சகாயராணி

**பவுலடியார்**
84. ராஜா ரோஸ்லின்
85. ஜான்சன் ஒஃபிலியா
86. லீமா ரோஸ்
87. ஹெலினா
88. காத்தரினா டிவோட்டா

**பரிபூரண மாதா**
89. சப்னா கின்ஸ்டன்
90. ஷெர்லின் ஜெனிஃபர்

**பொம்பெயி மாதா**
91. மாத்யூ கர்டோசா
92. தெரசா பிரகாஷ்
93. அந்தோனியம்மாள் மச்சாது
94. டிஃபானி அண்டோ
95. லூடா கான்ஸ்டன்
96. ஜான்சிராணி அமல்ராஜ்
97. ஸ்நோ ஆல்ஃப்ரிக்
98. இம்மாக்குலேட்
99. சில்வின் ஜெனிஃபா

**இராயப்பர்**
100. இந்திரா ரெஃப்லின்
101. நேவிசம்மாள்
102. டெய்சி

**சவேரியார்**
103. டெலிலா அமலன்
104. ரூபா மனுவேல்
105. அண்டன் சகாயம்
106. ஜென்சி ஜோர்னஸ்
107. அனுஷ்யா பீட்டர்
108. வினிஸ்டா ஹெரின்
109. ஜான்சி ஜெயகுமார்

**செபஸ்தியார்**
110. அந்தோனியம்மாள் டென்சிங்
111. ஜெசிலா சேவியர்
112. அஸ்கேனியஸ்
113. பிரவீணா
114. பிரின்சி லியோ

**சிந்தாத்திரை மாதா**
115. நேசம்
116. ஜூடி ஆரோக்கியராஜ்
117. செல்வி லாசர்
118. இன்ஃபன்டா ஷரான்
119. சில்வியா அன்டோனட்

**சிறுமலர் அன்பியம்**
120. விஜி சகாயராஜ்
121. எல்சிட்டா ஆனந்த்
122. செலஸ்டின்
123. சோஃபியா ஜோசப்

**சூசையப்பர்**
124. கிறிஸ் ரிஜோ
125. ரூபி கொர்னேலியுஸ்
126. ஹேமலதா
127. மோனிஷா காஸ்பின்
128. வினிஸ்டா டார்வின்

**திருச்சிலுவை**
129. சரோலின் கில்டன்
130. ரமணி டிவோட்டா
131. ஜஸ்டின் ஸ்நோ குளோரி

**வியாகுல மாதா**
132. ராஜா ஜரின்
133. லூர்து லினட்

## பரிசு பெறுபவர்கள் : 4

| | |
|---|---|
| 134. சங்கரன்கோவில்; | சுவாமிநாதன் |
| 135. கயத்தாறு | அமல்ராஜ் |
| 136. தூத்துக்குடி ஸ்டேட் பாங்க் காலனி | ரெமி பிரவீண் |
| 137. தூத்துக்குடி திரு இதயங்களின் பேராலயம் | ரமோலா கமிலஸ் |

## பாராட்டுக்குரியவர்கள் : 66

**ஆலந்தலை**
138. மரியம்மாள்
139. பொன்சேகா
**வீரபாண்டியன்பட்டணம்**
140. ரேச்சல் ராயன்
**பழைய காயல்**
141. மலர்
**சிப்பிகுளம்**
142. ஜெனசிஸ்
**ஆறுமுகனேரி**
143. தொம்மை அந்தோனி
144. ஜெயராணி
**ஏரல்**
145. ஜாய்ஸ் ரத்தினம்
**புதியம்புத்தூர்**
146. ஹெலன் அன்னமணி
**சென்னை**
147. கமலஜோதி ஜெயசீலன்
148. ஒஃபிலியா தாமஸ்
149. எட்வர்ட் அமலி
150. ஷைனி ரால்ஃப்
151. ஆகத்தா
**செங்கல்பட்டு**
152. மார்கரட் மேரி
**பாளையங்கோட்டை**
153. பிரேமா குணசீலன்
**பேட்டை**
154. ஹெலனிட்டா
**கயத்தாறு**
155. அமல்ராஜ்
**பெரியகுளம்**
156. குழந்தை தெரஸ்
**திண்டுக்கல்**
157. ரொசாலி
158. ஜெர்மேன்
**கோயம்புத்தூர்**
159. ராஜேந்திரன் அருள்
160. சத்யா சேவியர்
**திருச்சி**
161. மோனிட்டா கிறிஸ்டி
162. மேத்யூ விவேக்
163. டோனி
164. ஜான்சி ராணி
**சேலம்**
165. செல்வ நாயகி
**மதுரை**
166. சகோ. ஜான்சி மேரி
167. சகோ. அப்போலின்
**வடக்குத்து**
168. ஹென்றிதாஸ்
**பரமக்குடி**
169. சைமன் சாந்தி

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
170. பீட்டர் ஜெயந்தி
171. ரிமோல்டா
**குருஸ்புரம்**
172. ஆசீர்வாதம்
173. பௌவுசி ஜோ மைக்கேல்
174. ஜான்சி மென்டிஸ்
175. பிளசி செல்வராஜ்
176. டெல்பின்
**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
177. சுகிர்தா
178. ஷெரினா
179. சகாயம்
180. செல்வி ஆன்ஸ்லி
**யூதா ததேயு கோவில்**
181. ரோஸ் சேவியர்
182. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
**காந்திநகர்**
183. பேபி வால்டர்
184. ரியாலினோ
185. அன்சிட்டா
186. அனிதா
187. பின்டன் சோஃபியா
188. ஷாந்தினி
189. ரமேஷ் நர்மதா
**சார்லஸ் கோவில்**
190. சகாயிற்றா மச்சாது
**அன்னை வேளாங்கன்னி கோவில்**
191. செக்கரியா சாமுவேல்
192. ஜொசி குணபாலன்
193. ஜெசிந்தா பர்னாந்து
**இஞ்ஞாசியார்புரம்**
194. பெத்தனி கான்வென்ட்
சகோ. லோரா மேரி
195. சூசை நவீன்
**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
196. விர்ஜின்
197. தயாபர ராணி
**அந்தோனியார் கோவில்**
198. சோஃபியா விஜய்
199. இருதயம்மாள் கபிரியேல்
200. வயோலா ஜான்சன்
201. மென்சிலா லொயோலா
**திரேஸ்புரம்**
202. கோல்வின் ஜேசுராஜ்
**பாத்திமா நகர்**
203. மேரி ஹேம்லின்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 200**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 203**

மாதம் ஒரு மாதா படம் : 47

# பாசம் நிறைந்த தாய்





ஓவியர் ஜெயராஜ்

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 57)

ஏப்ரல் - 2024

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

531. பிப்ரவரி மாதத்துக்கான **பனிமய விவிலியப் பாசறை** (எண்: 103) 27.02.2024 செவ்வாய் மாலை 06.15க்கு லூர்து மாதா கெபியில் "பழைய ஏற்பாட்டின் புகழ்பெற்ற இறைவேண்டல்கள்" என்ற தலைப்பில் நடைபெற்றது. மொத்தம் 45 பேர் கலந்துகொண்டனர்.

532. கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் 03.03.2024 ஞாயிறு அன்று பேராலயப் பங்கு மக்கள் மங்கலகிரி டிவைன் மெர்சி தியான இல்லம் சென்று ஒருநாள் தியானத்தில் பங்கேற்றனர். பாளை மறைமாவட்டம் அருள்பணி. ஜெமல்ஸ் வழிநடத்திய இந்த தியானத்தில் 105 பேர் கலந்து பயனடைந்தனர்.

533. நமது பங்கின் ஆறாவது **மேய்ப்புப் பணிக்குழுவின் முதல் பொதுக்குழுக் கூட்டம்** 04.03.2024 திங்கள் மாலை 07.15க்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது.

534. பனிமயம் இதழின் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தின் மூன்றாவது நிகழ்வு 10.03.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அந்தோனியார் அரங்கில் நடைபெற்றது. பனிமயம் விவிலியப் போட்டி வெற்றியாளர்களின் ஒன்றுகூடல் என்று தலைப்பிடப்பட்டிருந்த இந்த விழாவுக்குக் கடந்த ஐந்து ஆண்டுகளாக விவிலியப் போட்டியின் கேள்விகளைத் தயாரித்த **அருள்சகோ. பிரகாசி** தலைமை தாங்கினார்கள். இந்த ஆண்டில் இப்பணியை ஒருங்கிணைத்த **அருள்சகோ. ஆல்ட்ரின்** அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது. வெற்றியாளர்களில் 64 பேர் இந்த விழாவில் கலந்துகொண்டு சான்றிதழும், நினைவுப் பரிசும் பெற்றுக்கொண்டனர்.

535. **"நோயாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கான"** பனிமய நோன்பு வழிபாடு (42) 17.03.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல்வேறு பங்குகளிலிருந்து தங்கள் பெயர்களைக் கொடுத்திருந்த 72 நோயாளர்களின் குடும்பங்களுக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்குப் பனிமயத் தாயின் பாதத்தில் வைத்து ஆசிபொழியப்பட்ட புனித ஒலிவ எண்ணெய் பரிசாக வழங்கப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை

*செபிக்கின்றோம்*

### இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 195. | கெனிட்டன் மங்களராஜ் | ஆனந்தி சகிலா | 22.01.2024 | திவ்ய பாலன் |

## நடைபெறவிருப்பவை

★ 01.04.2024 உயிர்ப்புத் திங்கள் அன்று பங்கின் அனைத்து இல்லங்களும் பாஸ்கா புனித நீரால் புனிதப்படுத்தப்படும்.

★ பனிமயம் இதழின் **வெள்ளிவிழா நிறைவுக் கொண்டாட்டம்** 07.04.2024 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு அருள்முனைவர் லெரின் டிரோஸ் அவர்களின் தலைமையில் அந்தோனியார் அரங்கத்தில் நடைபெறும். பனிமயம் வெள்ளிவிழா மலர் வெளியிடப்படும். கடந்த 25 ஆண்டுகளாக பனிமயம் இதழை அச்சிட்ட பதிப்பாளர், வடிவமைப்பாளர், அலுவலக ஊழியர், முன்னாள் மேலாளர்கள் ஆகியோருக்குப் பனிமய வெள்ளிவிழா விருதுகள் வழங்கப்படும்.

★ 05.04.2024 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 06.04.2024 மாதத்தின் முதல் சனி. அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

★ நமது பங்கின் புதிய குரு **அருள்பணி. மாரியோ** அவர்களின் முதல் நன்றித் திருப்பலி 15.04.2024 திங்கள் மாலை 05.30 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து, பேராலய மண்டபத்தில் வரவேற்பு வழங்கப்படும்.

★ “தொழில் நிறுவனங்களுக்காக” **பனிமய நோன்பு வழிபாடு** (43) 21.04.2024 ஞாயிறு அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 166. | 02.04.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | உயிர்ப்பின் வாழ்வு |
| 167. | 09.04.2024 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | சான்று பகர்ந்து வாழ்வோம் |
| 168. | 16.04.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | வெற்றி வாழ்வு வாழ்வோம் |
| 169. | 23.04.2024 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | தூய வாழ்வு வாழ்வோம் |
| 170. | 30.04.2024 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | நன்றி வாழ்வு வாழ்வோம் |
| 171. | 07.05.2024 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | இறைப்புகழ்ச்சி |

## புனித பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி

### 2019 முதல் 2021 ஆகஸ்ட் வரை வந்த தங்க காணிக்கைகள்

1. வசந்தி பங்கஜம் சகோதரிகள்,
2. ஜூடு, ஆல்ஃபா,
3. இருதயராஜ் ஜோசபின்
4. பிரபு ரேவதி
5. அருள்வளன்
6. ஸ்நோ ஆன்சன்
7. ஜாக்குலின் மணி
8. தொனாத்துஸ் ஜெனிட்டா
9. தொம்மை அந்தோனி லியோன்
10. விக்டோரியா மிராண்டா
11. தங்க அருண்
12. ஜோபாய் சதா
13. முருகராஜ்
14. ப்ளெசில்லா இருதயராஜ்
15. பனிமய அன்னையின் மகன்
16. ஓர் அருள்சகோதரி

**இவர்கள் தந்த காணிக்கைகளுடன், ஏற்கனவே கடந்த பங்குத் தந்தையரின் காலத்தில் வந்த தங்கக் காணிக்கைகளையும் சேர்த்து, 200 பவுன் தங்கத்தில் 8 புதிய ஆபரணங்கள் செய்யப்பட்டு, 01.01.2022 அன்று அணிவிக்கப்பட்டன.**

### 2021 ஆகஸ்டுக்குப் பின்னர் புதிதாக வந்த தங்க காணிக்கைகள்

| | | |
|---|---|---|
| 17. | ராபின்சன் | இஞ்ஞாசியார்புரம் |
| 18. | அமல்ராஜ் | மதுரை |
| 19. | இராஜ செல்வன் | காரங்காடு |
| 20. | சகாய கிளாட்சன் | பாளையங்கோட்டை |
| 21. | அந்தோனிசாமி ஜெருஷா | கதீட்ரல் பங்கு |
| 22. | வசந்தி பங்கஜம் சகோதரிகள் | தூத்துக்குடி |
| 23. | சகாயம் தெரசையா | வியாகுல மாதா அன்பியம் |
| 24. | அருள்சகோ. அன்னபாக்கியம் | பெத்தனி கான்வென்ட் |
| 25. | அனிஸ் | மார்த்தாண்டம் |
| 26. | சுதீஷ் | கொல்லம் |
| 27. | ஆடிட்டர் பவுல்ராஜ் | சேலம் |
| 28. | சதா ஆசிரியை | லூர்தம்மாள்புரம் |
| 29. | ஜேக்கப் ஜெசிந்தாராணி | அலங்காரத்தட்டு |
| 30. | மோனிகாஸ்ரீ தங்கராஜ் | சென்னை |
| 31. | சிம்லா ஜெரால்ட் | தூத்துக்குடி |
| 32. | லூயிஸ் வில்சன் | சென்னை |
| 33. | நொரின் மச்சாது | போல்டன்புரம் |
| 34. | ரியா (ருடால்ப், ப்ரீத்தி) | திவ்ய பாலன் அன்பியம் |
| 35. | பிரான்சிஸ் சத்யராஜ் | தோமையார்கோவில் |
| 36. | உஷா | |
| 37. | பனிமய அன்னையின் மகள் | |



**இவர்கள் பனிமயத் தாய்க்குக் காணிக்கையாகத் தந்த தங்க ஆபரணங்கள் எடை போடப்பட்டு, 916 தரத் தங்கமாக மாற்றி, 28 பவுன் தங்கத்தில் ஒரு தங்க மாலையும் (20 பவுன்) ஒரு நெக்லஸ் மற்றும் ஒரு ஜோடி கம்மல்களும் (8 பவுன்) புதிதாகச் செய்யப்பட்டு, தங்கத் தேரில் பனிமயத் தாயின் திருச்சுரூபம் பவனியாக வந்தபோது அணிவிக்கப்பட்டன.**

## 2023 ஆகஸ்டுக்குப் பின்னர் புதிதாக வந்த தங்க காணிக்கைகள்

| | | |
|---|---|---|
| 38. | அனிற்றா | கனடா |
| 39. | மெர்சி லதா | தூத்துக்குடி |
| 40. | லாவண்யா வர்கீஸ் | பேட்டை |
| 41. | விக்டோரியா மேரி | சென்னை |
| 42. | ஸ்டாலின் கார்த்திகா | காமாத்தூர்கோணம், குழித்துறை |
| 43. | ரேச்சல் | பனிமய அன்னை பேராலயம் |
| 44. | அன்றனி செல்வம் | சென்னை |
| 45. | டால்டன், பென்னி | திருநெல்வேலி |
| 46. | கேசவன் | அழகர் ஜூவெல்லர்ஸ் தூடி |
| 47. | இந்துமதி | பிரையண்ட் நகர் |
| 48. | ஜெயந்தி சில்வா | சிறுமலர் அன்பியம் |
| 49. | ஆனி ஜெனிஃபர் | லண்டன் |
| 50. | சதா டீச்சர் | லூர்தம்மாள்புரம் |
| 51. | ஆரோக்கியராஜ் | ஆரோக்கியபுரம் |
| 52. | மனோஜ் குமார் | சென்னை |
| 53. | ஜெர்லுசா | திருஇதயங்களின் பேராலயம் |
| 54. | பிரபு ரேவதி | கழுகுமலை |
| 55. | ஸ்நோலின் | ஸ்ரீபெரும்புதூர் |
| 56. | ஜான்சன் தல்மேதா | தூத்துக்குடி |
| 57. | செல்லத்துரை ஜெயா | பாளையங்கோட்டை |
| 58. | ஜான் கில்பர்ட் | திண்டுக்கல் |
| 59. | மரியா டெக்ஸ்டைல்ஸ் | கோவை |
| 60. | மிஸ்டிக்கா | வீரபாண்டியன்பட்டணம் |



**தங்கத் தேர்ப் பெருவிழாவுக்குப் பிறகு பனிமய அன்னைக்குக் காணிக்கையாக இவர்கள் தந்த நகைகள் உருக்கப்பட்டு 916 ஹால் மார்க் தரத்தில் 20 பவுன் தங்க செபமாலை செய்யப்பட்டு, எதிர்வரும் 31.03.2024 உயிர்ப்பு விழா அன்று பனிமய அன்னைக்கு அணிவிக்கப்படும். தொடர்ந்து, அனைத்து முதல் சனிக்கிழமைகளிலும் அணிவிக்கப்படும்.**

**இவ்வாறு, கடந்த ஐந்து ஆண்டுகளில் மூன்று முறை (2022, 2023, 2024) மொத்தமாக 248 பவுனில் அன்னைக்கு 10 ஆபரணங்கள் செய்து அணிவிக்கப்பட்டுள்ளன.**

## 2024 ஜனவரிக்குப் பின்னர் புதிதாக வந்த தங்க காணிக்கைகள்

| | | |
|---|---|---|
| 61. | காணிக்கைப் பெட்டியில் போடப்பட்டது | |
| 62. | கிளமண்ட் அன்றனி ராஜ் | தஞ்சாவூர் |
| 63. | முனைவர் அருள்மொழி செல்வி | வாகைக்குளம் |
| 64. | பிரைட்டன் பபிஸ்டா | புன்னைக்காயல் |

**இவை இந்தியன் வங்கி லாக்கரில் வைக்கப்படுகின்றன. ஓரளவு காணிக்கைகள் சேர்ந்தவுடன் புதிய ஆபரணம் ஒன்று செய்யப்படும்.**

**அருள்பணி. குமார்ராஜா**
அதிபர், பங்குத் தந்தை

24.03.2024

# பனிமயம்

## வெள்ளிவிழா நிறைவுக் கொண்டாட்டம்

பனிமயம்

25 ஆண்டுகள்

### நிகழ்வு : 4

நாள் : **07.04.2024 ஞாயிறு,** சரியாக **மாலை 04.00** மணி

இடம் : **புனித அந்தோணியார் அரங்கம்,**
புனித பனிமய அன்னை பேராலய வளாகம்

தலைமை :

**அருள்முனைவர் லெரின் டிரோஸ்**

(முன்னாள் அதிபர், பங்குத் தந்தை, பனிமய இதழாசிரியர், பதிப்பாளர்)

நிகழ்வை

1. இறைவணக்கம், வரவேற்புரை
2. தலைமையுரை - **அருள்முனைவர் லெரின் டிரோஸ்**
3. நூல் வெளியீடு
   பனிமயம் வெள்ளிவிழா மலர்
   "மரியன்னையின் முன்னோடிகள்" - அருள்பணி. குமார்ராஜா
   "வானத்து வதனமொழி" - திருமிகு. கலாபன் வாஸ்
   "வைரலாகும் வைரங்கள்" - திருமிகு. கலாபன் வாஸ்
   "வீணையில் விளைந்த சலனங்கள்" - திருமிகு. வெனான்சியுஸ்
4. **வெள்ளிவிழா விருதுகள் வழங்குதல்**
5. பனிமயப் பாசறைப் பங்கேற்பாளர்களுக்குப் பரிசுவழங்கல்
6. போட்டிகளின் வெற்றியாளர்களுக்குப் பரிசு வழங்குதல்
7. தேநீர் விருந்து

**போட்டிகளின் வெற்றியாளர்கள்**

| | | |
|---|---|---|
| கவிதை : | முதல் பரிசு : | சகோ. பியூலா |
| | இரண்டாம் பரிசு : | திரு. லிஸ்டன் கோமஸ் |
| | மூன்றாம் பரிசு : | திருமதி. பிரின்ஸி |
| கட்டுரை : | முதல் பரிசு : | செல்வி. ஜோஸ்பின் கிளாடியா |
| | இரண்டாம் பரிசு : | திருமதி. ரோஸ் சேவியர் |
| | மூன்றாம் பரிசு : | திருமதி. அனிட்டா பர்னாந்து |
| கதை : | முதல் பரிசு : | திரு. ம. வெனான்சியுஸ் |
| | இரண்டாம் பரிசு : | திருமதி. இந்திரா சீலன் |
| | மூன்றாம் பரிசு : | திருமதி. பிரபாவதி பர்னாந்து |

*அனைவரும் வருக!*

**அருள்பணி. குமார்ராஜா**
மேலாளர், இதழாசிரியர்

"உங்கள் பொருட்டுக் கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்"

# குருத்துவ அருள்பொழிவு வாழ்த்துகள்!

**புனித** பனிமய அன்னை பேராலயப் பங்கின் மண்ணின் மைந்தர்,

## திருத்தொண்டர் ஃபிராங்க் மாரியோ



தூத்துக்குடி மறைமாவட்டத்திற்காக **14.04.2024 ஞாயிறு** மாலை 05.00 மணிக்கு திரு இதயங்களின் பேராலயத்தில் குருவாக அருள்பொழிவு செய்யப்படவிருக்கிறார். தொடர்ந்து **15.04.2024 திங்கள்** மாலை 05.30 மணிக்கு நமது பேராலயத்தில் தமது முதல் நன்றித் திருப்பலியை நிறைவேற்றவிருக்கிறார். அன்னாரின் அருள்பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

# துறவற வெள்ளிவிழா வாழ்த்துகள்!

அடைக்கல அன்னை அவையில் இணைந்து துறவியராகி, தமது துறவற வாழ்வில் **25 ஆண்டுகளை** நிறைவு செய்யும் புனித பனிமய அன்னை பேராலயப் பங்கின் **மண்ணின் மலர்கள்**





**அருள்சகோ. சுகிர்தா FBS** **அருள்சகோ. மர்சிலின் மேரி FBS**

இருவரையும் வாழ்த்துகிறோம். இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

*வெள்ளிவிழா நன்றித் திருப்பலி*

**11.05.2024 சனி மாலை 05.30 - பனிமய அன்னை பேராலயம்**

விண்ணக வாழ்வின்

# 10ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

*24.04.2024*



பிறப்பு
1922

இறப்பு
24.04.2014

வயது : 92

# மேரியம்மாள் ரொட்ரீகோ

திருப்பலி

24.04.2024 புதன்கிழமை மாலை 5.30 மணி
புனித பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மக்கள் — மருமக்கள்
பேரன்கள் — பேத்திகள்
பூட்டன்கள் — பூட்டிகள்
மற்றும் உறவினர்கள்

289, தெற்கு காட்டன் ரோடு, தூத்துக்குடி - 1.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு
அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது." (திபா 116:15)

பிறப்பு
13.06.1927



இறப்பு
13.04.2018

# C. லிட்வின் பர்னாந்து

**[ W/o. கொலம்பஸ் பர்னாந்து (Late) ]**


*அன்புத் தாயை நினைவுகூரும்*

*மகன் :* **C. ஜோன்ஸ் பர்னாந்து**

*மற்றும்*

**குடும்பத்தினர்**

R. Soundari



நான்கு ஆண்டுகள் நீங்க
இல்லாம நாங்க

SHINY Ph : 98421 31493